**நாள். 01.07.2025**

**<u>O.S No. 47/2023</u>**

**வா.சா. 2**

**திரு. வெங்கடேசன்**

த/பெ. பெருமாள்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>குறுக்குவிசாரணை</u>**

1. இந்த வழக்கில் பிரதிவாதி சகாதேவன் எனது தம்பி என்றால் சரிதான். எனது அப்பா ADMK கட்சியில் பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் கட்சியில் உறுப்பினர்களாக இருந்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி எனது மனைவி என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால், தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றுகூறி வழக்கு தாக்கல்செய்துள்ளார். தாவா சொத்தில் வீடு இல்லை, சாலை உள்ளது. தென்னைசோலையால் ஆன சாலையாகும்.

2. நான் தாக்கல்செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எனது மனைவி சொல்லி எழுதினார்கள் என்றால் சரிதான். நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து பட்டாவழி பாத்தியம் என்று எனது மனைவி சொல்லியுள்ளார் என்றால், அதுபற்றி எனது மனைவிக்குதான் தெரியும். ஊர்நத்தத்தில் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். ஊர்நத்ததிற்கு பட்டா வழங்கப்படவேண்டும் எனில் அதில் வீடு இருக்கவேண்டும் என்றால் சரிதான். எனது பட்டாவில் வீட்டுமனை என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஓலை வீடு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.2 பட்டாவில் ஓலைவீடு இருந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். எனது தந்தையின் அனுபவத்தில் வீடுகட்டி குடியிருந்தார் என்றால் சரியல்ல. ஓலை குடிசை வீட்டிற்கு மின்இணைப்பு எண் எதுவும் வழங்கப்படவில்லை. வழக்குசொத்தில் ஓலை குடிசை வீடு இல்லை என்றால் சரியல்ல. சீட்போட்ட வீட்டில் ADMK கட்சி அலுவலகம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது அப்பா குடியிருந்த நிலையில் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக வேண்டி மின்இணைப்பு இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தில் உள்ள வீட்டின் மின்இணைப்பு எண்.83 என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வீட்டின் கதவு எண்.1/123 என்றால் சரியல்ல. வாதி எனது மனைவி என்பதால் தாவா சொத்தில் உள்ள வீட்டை மறைத்து வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி எனது மனைவி என்பதால் மின்இணைப்பு, கதவு எண் தெரியாது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூலிவேலை செய்துவருகிறேன். எனது மனைவியும் கூலிவேலை செய்கிறார்.

5. நானும், எனது மனைவியும் பெங்களூரில் பேப்பர்கடை, காய்கறி கடை வைத்து நடத்திவருகிறோம் என்றால் சரியல்ல. நான் கடந்த 40 வருடமாக தருமபுரியில் இல்லை என்றால் சரியல்ல. நான் பெங்களூரில் குடியிருந்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா குடியிருந்த வீட்டை பொறுத்து எனது பெயருக்கு பட்டா பெற்றதால் அதை ரத்துசெய்யகோரி எனது அப்பா மனு கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தாசில்தார் விசாரணையில் நானும், எனது மனைவியும் கலந்துகொண்டோம் என்றால் சரியல்ல.

6. 06.03.2015ம் தேதியில் ம.கு.எண்.779/2015 என்ற மனுவின்பேரில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது நானும், எனது மனைவியும் போனோம் என்றால் சரியல்ல. நானும், எனது மனைவியும் திருமணமானது முதல் ஒரே வீட்டில் தான் குடியிருந்துவருகிறோம் என்றால் சரிதான். 07.11.2011ம் தேதி எனது மனைவிக்கு தாவா சொத்தை விற்றதாக கிரயம் செய்துகொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு விற்பனை செய்ததற்கான காரணம் என்னவென்றால் எனது மகனின் மருத்துவ செலவுக்காக விற்றோம். எனது மனைவிக்கு ரூ.20,000/– கிரயம் செய்துகொடுத்தேன்.

7. தாவா சொத்தை பொறுத்து வில்லங்கம் செய்வதற்காக மோசடியாக கொடுக்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் கிரயம் செய்துகொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எப்போதும் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஓலை வீடு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி தான் குடியிருந்துவருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவண சொத்து விபரத்தில் வீடு இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக ஓலைவீடு உள்ளதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்தின் செக்குபந்தியே தவறு என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தின் மதிப்பை குறைத்து வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தம்பியை ஏமாற்றும் நோக்கில் வழக்கு தாக்கல்செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவாவில் கோரியவாறு பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.